1975 நவம்பர் 11]

Incentive Bonus to the Conductors and Drivers

* 113. *Q.*—THIRU KU. MA. BALASUBRAMANIAM: Will the Hon. the Minister for Labour and Transport be pleased to state:

(*a*) whether the Government are aware of the fact that the drivers and conductors in their desire to get more incentive bonus ar eoverloading the buses and also allow foot-board travel which lead to accidents; and

(*b*) if so, whether the Government have any proposal to punish the drivers and conductors also, besides punishing the foot-board travellers?

நடத்துநர்களுக்கும் ஓட்டுநர்களுக்கும் ஊக்க ஊதியம்

திரு. கு. மா. பாலசுப்பிரமணியம் : மாண்புமிகு தொழிலாளர் நலன் & போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட விளுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) ஊக்க ஊதியம் பெறவேண்டும் என்ற எண்ணத்தில் பேருந்து நடத்துநர்களும், ஓட்டுநர்களும் அளவுக்கு மீறியும் பேருந்து படிக்கட்டு களிலும் பயணிகளை ஏற்றிக் கொள்கின்றனர் என்பதையும் இதனால் விபத்துகள் ஏற்படுகின்றன என்பதையும் அரசு அறியுமா ?

(இ) ஆமெனில், மேற்குறிப்பிட்ட படிக்கட்டுப் பயணிகளைத் தண்டிப் பதுடன், பேருந்து நடத்துநர்களையும், ஓட்டுநர்களையும் தண்டிக்க அரசிடம் உத்தேசம் ஏதும் உள்ளதா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : (அ) ஆம்.

(இ) பணியாளர்களின்மீதும், பயணிகள் மீதும் இது குறித்து நட வடிக்கை எடுக்க மோட்டார் வாகன சட்டத்திலும் அதன்கீழ் இயற்றப்பட்ட விதியிலும் வழி செய்யப்பட்டிருக்கிறது. படிக்கட்டுகளில் பயணம் செய்யக் கூடாது என்கின்ற கட்டுப்பாட்டைக் கடுமையாக செயல்படுத்த வேண்டி பல்லவன் போக்குவரத்துக் கழகத்திற்கு அறிவுறுத்தப்பட்டு, இது இப்போது செயல்படுத்தப்படுகிறது.

திரு. கு. மா. பாலசுப்பிரமணியம் : பஸ்களின் படிக்கட்டில் நின்று பயணம் செய்பவர்களையும் கண்டக்டரே தடை செய்ய வேண்டும். பிக்பாக்கெட் அடிப்பவர்களையும், மது குடித்து விட்டு தகராறு செய்பவர்களையும் சட்ட

விரோதமான செயல் என்று கருதி, தடுத்து நிறுத்த எப்படி கண்டக்டர் கடமைப்பட்டிருக்கிறாரோ அவ்வாறே படிக்கட்டுகளில் நின்றுகொண்டு பிரயாணம் செய்பவர்களையும் தடுத்து நிறுத்த கண்டக்டர் கடமைப்பட்டிருக்கிறார் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். 21-7-1975 அன்று மாலை அண்ணா சமாதியருகில் ஒரு விபத்து நடந்திருக்கிறது. அவ்வளவு அகலமான கடற்கரைச் சாலையில் ஒரு டாக்சியை ஓவர்டேக் செய்ய வேண்டும் என்று மிகவும் இடதுபுறமாக பஸ்ஸை ஓட்டியதில் அந்த பஸ் சாலை ஓரமாகச் சென்று விளக்குக் கம்பத்தில் மோதியதால், 22 வயது உள்ள அசோகன் என்ற வாலிபன் அடிபட்டு ஒரு மணி நேரத்திற்குள்ளேயே உயிர் இழந்து விட்டான். மேலும் அவனுடன் நாலைந்து பேர்களுக்கு பலத்த காயம் ஏற்பட்டு, அவர்கள் பொது மருத்துவ மனையில் சிகிச்சை பெற்றிருக்கின்றனர். இறந்த வாலிபர் கு. சா. கிருஷ்ணமூர்த்தி அவர்களின் மகன். ஆகையால் சம்பந்தப்பட்ட டிரைவர், கண்டக்டர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா? இறந்தவரின் குடும்பத்திற்கு நஷ்ட ஈடு கொடுக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: இறந்தவரைப் பற்றி தற்போது என்னிடம் தகவல் இல்லை. ஆனால் உயிர் இழந்தவர்களுக்கு நஷ்ட ஈடு கொடுப்பதற்கு பல்லவன் போக்குவரத்துக் கழகத்திலே ஏற்பாடுகள் இருக்கின்றன. அது பற்றி அணுகினால், முறையான நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. ஓய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பல்லவன் போக்குவரத்துக் கழகத்திலே இவ்வாறு ஏற்பாடுகள் இருக்கின்றன என்று சொன்னார்கள். அது பல்லவன் போக்குவரத்துக் கழகத்திலே மட்டும் தானா அல்லது அரசு எடுத்துக் கொண்டிருக்கிற எல்லாப் போக்குவரத்துக் கழகங்களுக்கும் பொருந்துமா என்பதை அறிந்து கொள்ள விரும்புகிறேன். இந்த போனஸ் சிஸ்டத்தினால் எங்கள் பகுதியிலே பஸ்கள் மிகவும் அதிகமாக மக்களை ஏற்றிக்கொண்டு, இன்னொரு பஸ்ஸைவிட தமக்கு அதிக போனஸ் கிடைக்கவேண்டுமென்ற நோக்கத்தில், டிரைவர்களும் கண்டக்டர்களும் மிகவும் வேகமாக பஸ்ஸை செலுத்திக்கொண்டிருக்கிறார்கள். இவ்வாறு ஓட்டுபவர்கள்மீது நடவடிக்கை எடுக்காமல் இருப்பதாகத் தெரிகிறது. ஆகையால் அரசு நடவடிக்கை எடுக்க முயலுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: இந்த விதி எல்லோருக்கும் பொருந்தும். பல்லவன் போக்குவரத்துக் கழகத்திலே மட்டும்தான் என்பது இல்லை. தவறு செய்பவர்கள் மீது நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

1975 நவம்பர் 11]

திரு. கு. மா. பாலசுப்பிரமணியம்: உயிரிழந்த அந்த வாலிபன் ஒருவனே தன்னுடைய குடும்பத்தைப் பொறுப்பேற்றுக்கொண்டு நடத்தி வந்திருக்கிருன். அவர்களுக்கு வேறு உதவியும் இல்லே. ஆகையால் அந்தக் குடும்பத்திற்கு முதலமைச்சர் அவர்கள் நிதியிலிருந்து உதவித்தொகை கொடுப்பதற்கு வழிவகை செய்யப்படுமா? தீபாவளி சமயத்தில் மதுரையில் சேலேகள் பரிசு வாங்கச் சென்று உயிர் இழந்த 19 பேர் குடும்பங்களுக்கு முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து உதவி கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் அது போன்று இதற்கும் கொடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: நான் ஏற்கெனவே வேறு ஒரு அவையில் விளக்கம் அளித்திருக்கிறேன். வேறு எந்த ஒரு இலாகாவும் பொறுப்பேற்றுக்கொள்ள முடியாத சூழ்நிலேயில், யார் இறந்தாலும், அவர்களுக்கு அரசு நிறுவனத்திலிருந்து, அல்லது துறைகளிலிருந்து தொகை வழங்கப்படாமல் இருக்கும்போது, முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து தொகை அளிக்கப்படுகிறது. அவ்வாறு பொறுப்பு ஏற்றுக்கொண்டு நிதி வழங்கப்படுமென்ற நிலேயில் அரசுத் துறைகள் அல்லது நிறுவனங்கள் இருக்குமாஞல், அப்போது முதலமைச்சர் நிதியிலிருந்து வழங்கப்படுவதில்லே. யாரும் பொறுப்பேற்றுக்கொள்ளாத சூழ்நிலேயில்தான் முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து உதவி வழங்கப்படுகிறது.

திரு. கே. ராஜாராம்: பல்லவன் போக்குவரத்துக் கழகத்திற்கு எழுதியிருப்பதாக அமைச்சர் அவர்கள் கூறிஞர்கள். ஆஞல், இன்றுகூட சென்ட்ரல் ரயில்வே ஸ்டேஷன் பகுதியிலே பஸ் விபத்து நடந்து, உயிர்ச் சேதமும், பொருட் சேதமும் ஏற்பட்டிருக்கின்றன. அமைச்சர் அவர்கள்கூட அங்கு போய் நேரில் பார்த்து வந்திருக்கிருர்கள். அதுபற்றி ஆய்வுகள் செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: அதுபற்றிய விவர அறிக்கை இந்த அவையிலே வைக்கப்படவிருக்கிறது.

THIRU G. VASANTHA PAI: Sir, I wanted to ask the same question about the Central Station accident this morning.

Pension to Retired Employees of Chatram Department, Thanjavur district.

* 114. *Q.*—THIRU K. S. GANAPATHI (on behalf of THIRU G. SWAMINATHAN): Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state:

(*a*) whether it is a fact, that arrears of pension due to the retired employees of the Chatram Department, Thanjavur